**தலைப்பு 149 – கைத்தொழில் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கைத்தொழில் அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கைத்தொழில் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 23 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 11 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைத்தொழில் அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணகீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுதாய அடிப்படை சீர்திருத்த திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுலாக்கப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் பிழையாகக் காட்டுதல்

அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றது. எனவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன எனவும்,

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருதுரைகள்

### 1.6.1 நிதி நிலைமைக் கூற்று

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 1,652,136,442 ஆக இருந்த போதிலும் நிதி நிலைமைக் | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் 2020 இறுதிக் கணக்கு பொழிப்பின் மூலம் செலவு வைக்கப்பட்ட ரூபா 19,275,111 பெறுமதியின் காரணமாக | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூற்றில் அது ரூபா 1,671,411,554 ஆக இருந்ததனால் ரூபா 19,275,111 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் குறைவு பதியப்பட்டிருந்தது. | |
| (ஆ) | அமைச்சின் புத்தகசாலையில் காணப்பட்ட புத்தகங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்களாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | விரைவாக ஒரு குழுவினை நியமித்து உரிய பெறுமதிகள் மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சிற்குச் சொந்தமான சொத்துக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | நிதிக் குத்தகை முறைமையின் கீழ் ரூபா 18,940,000 பெறுமதியான 3 மோட்டார் வாகனங்களின் குத்தகை உடன்படிக்கை 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்திருந்தும் அவை சொத்துக்களாக இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பேற்பதற்குரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்த வாகனங்களை அமைச்சின் சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அமைச்சின் சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | கைத்தொழில் அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள ரூபா 13,400,000 பெறுமதியான 3 மோட்டார் வாகனங்கள் சொத்துக்களாக இனங் காணப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அமைச்சின் சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (உ) | அமைச்சினால் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் பெறுமதி அதன் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 1997 ஆம் ஆண்டிலிருந்து 30 கைத்தொழில் பேட்டைகளில் நிர்மாணிக்கப்பட்ட 14 நிர்வாகக் கட்டிடங்களின் பெறுமதியான ரூபா 105.878 மில்லியன் தொகையானது அமைச்சினால் மூலதனமாக்கப்படவில்லை. | அமைச்சின் மூலம் ஏனைய அரசாங்க அலுவலர்களுக்குச் சொந்தமான காணியில் கைத்தொழில் பேட்டை நிர்மாணிக்கப்பட்டதுடன் அதில் நுழைவு வீதி வடிகாண் முறைமை தெரு விளக்கு வீதி முறைமை முதலிய நிர்மாணங்களும் இடம் பெற்று வருகின்றன. | மூலதனமாககப்பட்ட செலவுகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

ஒவ்வொரு கைத்தொழில் பேட்டைகளுக்குரிய அரசாங்க அலுவலகங்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் திறைசேரியின் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனையைப் பெற்று எதிர்காலத்தில் அச் சொத்துக்களை அமைச்சின் சொத்துக்களாக அல்லது உரிய பிரதேச செயலகத்திற்கு ஒப்படைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### 1.6.2 முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளில் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி செயலாற்றல் கூற்றில் முற்பணம் பெறுவனவுகளாக ரூபா 45,298,859 தொகை பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் திறைசேரி அச்சுப் பிரதியின் பிரகாரம் அது ரூபா 34,729,454. ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி செயலாற்றல் கூற்றில் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 10,569,405 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டின் இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட பாதீடு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் திறைசேரியின் அரசாங்க கணக்குகள் மற்றும் பாதீட்டுத திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் (தலைப்பு இல 149) இந்த அமைச்சிற்குரிய பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்குரிய பெறுமதிகள் அச் செலவுத் தலைப்பில் | கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டிய பெறுமதியை சரியாக இனங்கண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) நிதி செயலாற்றல் கூற்றில் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 27,597,007 ஆக இருந்த போதிலும் திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் அது ரூபா 52,431,306.34 ஆக இருந்தது. அதற்கிணங்க ரூபா 24,834,299 தொகையான முற்பணக் கொடுப்பனவுகள் நிதி செயலாற்றல் கூற்றில் குறைவாகப் பதியப்பட்டிருந்தது. | காணப்படுகின்றவாறு CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டுள்ளன. மாதாந்தம் இந்த அமைச்சிற்குரிய பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் உரிய திறைசேரி மீதிகளுக்கு இணங்க மாதாந்தம் கணக்கிணக்கம் செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | |

**1.6.3 கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| கட்டுநிதி செம்மையாக்கல், கணக்கின் பிரகாரம் நி.பி 208 இன் கீழ் ஏனைய அமைச்சுக்களுக்காக பிரதான பேரேட்டில் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் ரூபா 828,973,502 ஆக இருந்த போதிலும் திறைசேரி ஏடுகள்/ நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 828,105,552 ஆக இருந்ததனால் ரூபா 867,950 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | அமைச்சின் விடயப் பரப்பு மற்றும் அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவுத் தலைப்பு இலக்கம் என்பன திறைசேரியின் அரசாங்க கணக்குகள் மற்றும் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்பட்ட தெளிவான விளக்கத்தின் பிரகாரம் என்பதனால் இச் செலவுத் தலைப்பிற்குரிய செலவுகளானது திறைசேரியின் மீதிகளுடன் கணக்கிணக்கம் செய்யப்பட்டு உரிய கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | சரியான பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கு தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

அமைச்சினால் கீழே தரப்படும் சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் சேதங்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருந்தும் அது நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை எனவும் தற்பொழுது நாளது வரையாக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. | நிதிப்பிரமாண ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்திற்கு இணங்க சேதங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது அமுல்ப்படுத்தப்படுகின்ற CIGAS கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனைத்து வவுச்சர்களும் ஆரம்பக் கட்டத்தின் போது பொறுப்புக்களாக (COMMITEMENTS) உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் தேவையான சந்தர்ப்பத்தில் பேணப்படுகின்ற பொறுப்புக்ககள் தொடர்பான பட்டியலை CIGAS மூலம் உருவாக்கி கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க அடிப்படையாகப் பேணப்படுகின்ற கொடுப்பனவுகளானது நாளாந்தம் பொறுப்புக்களைப் பரீட்சிப்பதற்கு முடியமான வகையில் பௌதீகரீதியாக பொறுப்புக்கள் பதிவேட்டினை பேணுதல் இடம் பெற்றிருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. | பொறுப்புக்களைத் தொடர்ச்சியாக பரீட்சிக்ககூடிய வகையில் பொறுப்புக்கள் பதிவேட்டில் அப் பொறுப்புக்கள் பதியப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதாண கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு தொடர்பாக செலவுத் தலைப்பின் கீழ் வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டின் சேமிப்புக்கள் தொடர்பான தெரிவுச் செவ்வையின் போது தெரிவிக்கப்பட்ட காரணங்களை கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாத 11 சந்தர்ப்பங்ள் காணப்பட்டதுடன் அச்சேமிப்புக்கள் 100 சதவீதத்திலிருந்து 35 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டிருந்தது. | கொரோனா விபரீதத்தின் அடிப்படையில் ஏனைய ஆண்டுகளைப் போலல்லாது இந்த ஆண்டின் போது திட்டமிட்டவாறு அலுவலக நடவடிக்கைகளை சுலபமாக நடத்துதல், புதிய செயற்திட்டங்களை ஆரம்பித்தல், பேணப்படுகின்ற செயற்திட்டங்ளை தொடர்ச்சியாக அமுல்ப்படுத்துதல், பொதுவாக எடுத்துக்கொள்ளப்பட்ட காலம் போதியதாக இல்லாமை, போதியளவு கட்டுநிதி கிடைக்காமை என்பன சேமிப்புக்களுக்கான காரணமாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவு மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும் |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

**பின்வரும் அவதானிப்புக்கள் செய்யப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் பொறுப்புக்களாக ரூபா 57,028,465 காட்டப்பட்டிருந்ததுடன் திறைசேரி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் அது ரூபா 252,454,006 ஆக இருந்தது அதற்கிணங்க ரூபா 195,425,541 குறைத்து பொறுப்புக்கள் காட்டப்பட்டிருந்தன. | உண்மையாக மேலும் அவ்வாறான பொறுப்பு கொடுப்பனவு செய்வதற்கு காணப்படாததனால் அது பற்றி அரசாங்க கணக்குகள் திணைக்களத்துடன் மேலும் நடவடிக்கை எடுத்து உரிய பொறுப்புக்களின் பெறுமதி இறுதிக் கணக்கில் காட்டப்பட்டுள்ள உண்மையான பொறுப்புக்களின் பெறுமதிக்கு திறைசேரியின் மீதியை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியான பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியதுடன் நிறுவனத்தின் வைப்புக்கள் திறைசேரி அச்சுப் பிரதியுடன் கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சினால் 2021 ஆம் ஆண்டின் போது 2020 ஆம் ஆண்டிற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 1,755,530 பெறுமதியானது கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பல கொடுப்பனவுகள் மின்சாரம் நீர் மற்றும் தபால் தொலைத் தொடர்பு சேவைகள் என்பவற்றிற்காக 2020 ஆம் ஆண்டின் இறுதிக்காலத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அத்தியாவசிய செலவுகளாக இருந்ததுடன் நி.பி 115 இன் பிரகாரம் 2021 மார்ச் 31 வரை உரிய செலவுகளைத் தீர்த்துவைக்கும் இயலுமையின் அடிப்படையில் இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | ஏனைய நிறுவனங்களுக்காக காணப்படுகின்ற பொறுப்புக்கள் அனைத்தும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காட்டப்படுதல் வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பற்றிலுள்ள ஏற்காடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி 104(1) – 104(4) | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது நட்டம் ஏற்பட்ட முறையே 08 மற்றும் 01 வாகன விபத்து சம்பந்தமாக விசாரணை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் இதுவரை எதுவித அறிக்கையும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2020 ஆம் ஆண்டின் போது 05 வாகன விபத்துக்களுக்கு ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக எந்த ஒரு உத்தியோகத்தரும் 2021 மார்ச் 31 ஆந் திகதி வரை நியமிக்கப்டப்டிருக்கவில்லை. | இன்று வரை நி.பி 104 விசாரணைக்கான 6 குழுக்கள் நியமிக்கப்பட்டு அதற்கிணங்க கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள துடன் எதிர்காலத்தில் இந் நிலைமையைத் தவிர்த்துக் கொள்வதற்காக திட்டத்துடனான வேலைத் திட்டம் தயாரிக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஆ) அரசாங்க நிருவாகச் சுற்றறிகை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்கும் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் ஓடியதன் பின்னர் அல்லது இயந்திரம் சம்பந்தமாக திருத்தங்கள் செய்ததன் பின்னர் ஆகிய காரணங்களுக்கு மத்தியில் முதலில் ஈடுபடுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றறிகை வழங்கிய திகதியிலிருந்து இன்று வரை அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை | நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாததன் காரணமாக எரிபொருள் பரிசோதனையை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததுடன் தற்பொழுது பரீட்சித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிகையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2009 யூன் 17 ஆந் திகதிய 9/2009 (1) ஆம் இலக்க சுற்றறிகை | அமைச்சு பதவியணியினர் தமது சேவை நிலையத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளிச்செல்லலானது விரல் அடையாளமிடும் இயந்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்தும் அமைச்சு பதவியணியினர் அவ்வாறு செய்திருந்தமை பற்றி கணக்காய்விற்கு தகவல்கள் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | அமைச்சு பதவியணியிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு விரல் அடையாளமிடும் இயந்திரத்தில் வருகை மற்றும் வெளிச்செல்லலை பதிவு செய்யுமாறு தற்பொழுது ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிகையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| அமைச்சின் கீழ் காணப்படுகின்ற 32 கைத்தொழில் பேட்டைகளில் 913 காணித் துண்டுகள் (Plots) காணப்பட்டதுடன் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அவற்றில் 627 | 2020-01-24 ஆந் திகதி கைத்தொழில் பேட்டைகளில் காணப்பட்ட வெற்றுக் காணித்துண்டுகள் தொடர்பாக மூன்று மொழிகளிலும் 03 | பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்து காணிகளை வழங்கி கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| காணித்துண்டுகள் நானாவித முதலீடுகளில் ஈடுபட்டுள்ள முதலீட்டாளர்களின் தொழிற்சாலைகள் மற்றும் பொது வசதிகளுக்காக 104 காணித்துண்டுகளும் முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு உத்தேசித்துள்ள 66 காணித்துண்டுகளும் காணப்பட்டதுடன் 118 காணித்துண்டுகளானது (plots) அதாவது மொத்த காணித் துண்டுகளில் 13 சதவீதம் அளவானவை கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்பட்டதுடன் அவற்றில் இன்று வரை 62 காணித்துண்டுகள் வழங்கப்பட்டுள்ளன.<br><br>இன்றுவரை கைத்தொழில் பேட்டைகளில் 73 வெற்றுக் காணித்துண்டுகள் மாத்திரம் காணப்பட்டதுடன் அக்காணித்துண்டுகளில் அதிகமானவை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குரிய கைத்தொழில் பேட்டைகளிலேயே காணப்படுகின்றன. இக்கைத்தொழில் பேட்டைகளுக்காகவும் வேண்டுதல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. | வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| அமைச்சிற்குக் சொந்தமான 5 வாகனங்கள் 1-3 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலப்பகுதியாக திருத்தம் செய்யாது விளைவற்றுக் காணப்பட்டன. இந்த 5 வாகனங்களில் 2012,2013,2014 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட 3 வாகனங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. | மதிப்பீடானது காப்புறுதி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்படாமை போதியளவு நிதி ஏற்பாடு இல்லாமை, covid 19 நிலைமையினால் நிறுவனத்தை மூட வேண்டி ஏற்பட்டமை முதலிய விடயங்களின் காரணமாக இருந்ததுடன் 10 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் வாகனங்கள் செயற்படாதிருக்கின்றமை சம்பந்தமாக ஒரு அறிக்கையினை வழங்குமாறு 2021-04-07 ஆந் திகதிய கடிதத்தில் இயந்திரப் பொறியியலாளருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | விரைவாகத் திருத்தம் செய்வதற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியதுடன் புதிய வாகனங்களை கவனமாக பரீட்சித்தல் வேண்டும். |

## 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது இடம்பெற்ற 9 சம்பவங்கள் தொடர்பாக இன்றுவரை அறவிடப்படாதிருந்த பெறுமதி ரூபா 3,787,120 தொகையானது நட்டங்கள் மற்றும் சேதங்கள் நி.பி. 106 மற்றும் நி.பி 113 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் வெளிப்படுத்தப்படவில்லை.இன்னும் அறவிடப்படுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு உள்ள நட்டங்கள் தொடர்பான கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் இடம் பெற்ற வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 09 சம்வங்களுக்குரிய மதிப்பீட்டுப் பெறுமதியின் மொத்த தொகை ரூபா 3,787,120 ஆகும். அவற்றிற்கு மத்தியில் PD-6293 வாகனத்தின் மதிப்பீடு ரூபா 3,227,231 ஆக இருந்ததுடன் காப்புறுதி இழப்பீட்டினை அங்கீகரிப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக இன்று வரை வாகனங்கள் திருத்தம் செய்யப்பட்டிருக்காததுடன் ஏனைய வாகனங்கள் திருத்தம் செய்து ஓடுவதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளன. | ஆண்டின் இறுதியில் நட்டங்கள் மற்றும் விட்டுவிடுதல்கள் தொடர்பான கூற்றில் அறவிடப்படாத அனைத்து நட்டங்களும் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கையை அபிவிருத்தி செய்வோம் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழிலின்மை, வறுமை ஆகிய பொருத்தமான தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் நலன்பெறுனர்களைத் தெரிவுசெய்து பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி | 2019 பாதீட்டில் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2019 சனாதிபதித் தேர்தலின் பின்னர் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கொள்வனவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்து மாவட்ட செயலாளர்களுக்கு 2019/12/03 ஆந் திகதிகடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் நிதி அமைச்சினால் மாவட்ட | இதுவரை பகிர்ந்தளிக்காது காணப்படுகின்ற இப்பொருட்களை விரைவாக நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

அவர்களின் தொழில் முயற்சிகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மாவட்ட செயலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட பிரதிப் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் பிரதிப் பணிப்பாளர் இந்த நிகழ்ச்சித் திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களுடன் இனைந்து அப்பொருட்களை நலன் பெறுனர்களுக்கு பகிர்ந்தளித்தல் வேண்டும். எனினும் ஏனைய செலவுகளாக ரூபா 16,772,403 தொகை செலவு செய்து நாடு முழுவதும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி பதுளை மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2019 இறுதி மற்றும் 2020 மார்ச் மாதங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்த ரூபா 55.8 மில்லியன் பெறுமதியான பொருட்கள் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தும் அவை நலன்பெறுனர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை மேலும் அவற்றின் செல்லுபடியாகும் காலத்தினையும் மிகைத்து பல களஞ்சியங்களில் ஒழுங்கற்ற முறையில் குவித்து வைக்கப்பட்டு விளைவற்றதாக வைக்கப்பட்டிருந்தன.

செயலகங்களின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட அனைத்து செயற்திட்டங்களையும் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு தெரிவித்து 2019/11/20 ஆந் திகதிய BD/GPS155/09/01/HR/2019 ஆம் இலக்க கடிதம் மாவட்ட செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. பதுளை கண்டி மாத்தளை ஆகிய மாவட்ட செயலகங்கள் மற்றும் மட்டகளப்பு மாவட்டத்திலுள்ள இரண்டு பிரதேச செயலகங்கள் மாத்திரம் கொள்வனவு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்திருந்தன எவ்வாறாயினும், இந்த கொள்வனவு செய்த பொருட்களானது 2021/12 ஆம் இலக்க 2021-03-26 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் மிகவும் பொருத்தமான தொழில் முயற்சியார்களுக்கு உரிய உபகரணங்களை பகிர்ந்தளிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) அமைய/16/1424/723/ 039 ஆம் இலக்க அமைச்சரவை நீர்மானத்தின் மூலம் ரோபோ தொழில்நுட்பத்திற்காக சிறப்பான நிலையத்தை (CERA) ஆரம்பிப்பதற்கு தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கட்டிடத்தை புத்துருவாக்கம் செய்வதற்கும் ரூபா 120 மில்லியன் தொகை செலவு செய்யப்பட்டிருந்தது. இந் நிலையத்தை நடைமுறைப்படுத்துவதற்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தருக்கு 2017 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2018 ஒக்தோபர் மாதம் வரையான காலத்திற்கு ஒரு மாதத்திற்கு ரூபா 725,000 வீதம் சம்பளங்களும் படிகளுமாக ரூபா 11 மில்லியன் மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தும் ஒரு கம்பனியாகப் பதிவு செய்து தேவையான பதவயிணினர்களைச் சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் நிலையத்தின் நடவடிக்கைகளை ஆரம்பித்தல் இடம் பெற்றிருக்கவில்லை. இத் தொழில் முயற்சி வெற்றியளிக்காமையின் அடிப்படையில் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட இந் நிலையம் 2018 திசெம்பர் 28 ஆந் திகதிய 2013/14 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் 2020 ஆகஸ்ட் மாத்திலிருந்து கைத்தொழில் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. நிலைமை இவ்வாறு இருந்த போதிலும் 2020 நவம்பர் 16 ஆந் திகதிய 20/1725/320/025 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மாணத்தின் பிரகாரம் இந் செலவு செய்யப்பட்ட பணம் விளைவற்று இருப்பதற்கு இடமளிக்காது செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இச் செயற்திட்டம் இந்த அமைச்சின் கீழ் 2016 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஒக்தோபர் மாதம் வரை எங்கள் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் 2018.11.04 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இச் செயற்திட்டமானது கூட்டுறவு மற்றும் முதலீட்டு வர்த்தக அமைச்சின் விடயப் பரப்பிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் எங்களது விடயப்பரப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. 2018.12.25 ஆந் திகதி மீண்டும் இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டது. ஆனால் மீண்டும் 2018.12.28 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சின் விடயப் பரப்பிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் எங்களின் அனைத்து ஆவணங்களும் மேலதிக நடவடிக்கைகளுக்காக அந்த அமைச்சின் நடவடிக்கைகளுக்காக அந்த அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை இச் செயற்திட்டத்தின் பூரணப்படுத்தப்படாத செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு CERA செயற்திட்டத்தை மீண்டும் எமது அமைச்சிற்கு பொறுப்பேற்பதற்காக 2019.03.07 ஆந் திகதி சனாதிபதி செயலகத்திற்கு வேண்டுதலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2020.09.25 ஆந் திகதி அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மீண்டும் கைத்தொழில் அமைச்சின் விடயப் பரப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மீண்டும் 2020.09.25 ஆந் திகதி CERA நிறுவனம் இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் கௌரவ அமைச்சரினால் இது சம்பந்தமாக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் பொதுத் திறைசேரியின் கீழ் வரையறுத்த கம்பனியாக CERA நிறுவனத்தை ஸ்தாபிப்பதற்கு தேவையான

நிலையத்தில் காணப்பட்ட இயந்திர உபகரணங்களை கொழும்ப - 10 ட்ரேஸ் சிடிக்கு கொண்டு செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

இச் யெற்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்ட கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படாது காணப்பட்டதனாலும் மொறட்டுவை பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் உள்ளதனாலும் தெரிவு செய்யப்பட்டது. எவ்வாறாயினும் இதனை சுதந்திரமான ஒரு செயற்திட்டமாக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்துருவாக்கலுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் (COSTI) கீழ் செயற்படுத்தி இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை வளவில் உள்ள ஒரு கட்டிடம் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. உரிய மென்பொருளுக்காக இரகசிய இலக்கம் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் அவை COSTI நிறுவனத்திடம் காணப்படுவதனால் அவை பயன்படுத்த முடியாது காணப்படுகின்றது என்பது பிழையானதாகும்.

அமைப/20/1725/320/025 ஆம் இலக்க 2020.12.01 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் CERA நிறுவனம் சுயமாக அபிவிருத்தியடையும் குறிக்கோளில் கைத்தொழில் அபிவிருத்திச் சபை வளவிலிருந்து Trace City (ட்ரேஸ் சிடி) இற்கு CERA நிறுவனத்தை எடுத்துச் செல்வதற்கு அமைச்ரவை தீர்மானித்திருந்தது. புத்துருவாக்கம் செய்யப்பட்ட கட்டிடத்தை இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை தனது செயற்பாட்டிற்காக பயன்படுத்தலாம்.

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு பதவியணிக்குள் சிரேஷ்ட மட்டத்தில் 12 வெற்றிடங்கள், இரண்டாம் மட்டத்தில் 34 வெற்றிடங்கள், மூன்றாம் மட்டத்தில் 02 வெற்றிடங்கள், ஆரம்ப மட்டத்தில் 12 வெற்றிடங்கள் என்பவற்றுடன் மொத்த வெற்றிடங்கள் 60 ஆகக் காணப்பட்டது.<br><br>செயற்பாடுகளை தடையின்றி மேற்கொள்வதற்குத் தேவைப்படுகின்ற பதவியணியினர்களை இனங்கண்டு அப்பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அமைச்சின் சிரேஷ்ட மட்டத்தில், மூன்றாம் மட்டத்தில் மற்றும் இரண்டாம் மட்டத்திலுள்ள வெற்றிடமான பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க நிர்வாக அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தேவையற்ற பதவிகளை நீக்கி பதவியணியினை அங்கீகரித்துக் கொள்ளுமாறு எனது MIC/ADM//Cadre ஆம் இலக்க 2020.09.11 ஆந் திகதிய கடிதத்திலும் 2021.01.06 ஆந் திகதிய கடிதத்திலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு விபரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அத்தியாசியமான பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஒக்தோபர் 06 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்ட தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபைக்காக அமைச்சிற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 277 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வழங்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், இந்த உத்தியோகத்தர்களுக்கு அமைச்சினால் சம்பளங்களும் கூலிகளும் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அமைச்சின் மற்றும் தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகாரசபையின் பதவியணியினுள் இப் பதவியணியினர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருததி அதிகார சபையானது 2020.10.06 அந் திகதிய 2187/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இந்த அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அந்த நிறுவனத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள 277 உத்தியோகத்தர்கள் இந்த அமைச்சிற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இப் பதவிகளையும் கைத்தொழில் அமைச்சின் அங்கீகரித்த பதவியணிக்கு உள்ளடக்குமாறு எனது MIC/ADM/12/04/06 ஆம் இலக்க 2020.12.10 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தப்பட்டது. அந்த நிறுவனத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபடுவதற்கு மேலும் 82 பதவிகளை அங்கீகரிக்குமாறு அக்கடிதத்தின் மூலம் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது. | அமைச்சின் அல்லது தேசிய தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அதிகார சபையின் அங்கீகரித்த பதவியணிக்குள் இந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |